**தலைப்பு 238 – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 238 – அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 நிலுவை வருமானம் அறவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தே காணப்படுகின்ற ரூபா 62,842,201 ஆன நிலுவை சமூக பொறுப்பு வரித் தொகையில் மீளாய்வாண்டின் போது எந்த ஒரு வரித் தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இந்த நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுமாறு வருமானம் சேகரிக்கும் நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போது 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 8,800,000 தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 5,175,127 அதாவது அந்த செலவின விடயத்தின் மொத்த தேறிய | 238-1-1-0-1409(24) செலவின விடயம் மற்றும் 238-1-1-0-2401 செலவின விடயத்தில் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் உள்ளபடியாக மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் சரியாகவும் பொருத்தமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டில் 55 சதவீதம் மற்றும் 100 சதவீதத்திற்கு இடையிலான அளவு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய ஆரம்ப மதிப்பீட்டின் கூட்டுத்தொகையான ரூபா 4,000,000 இற்காக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் கூட்டுமொத்தமாக ரூபா 2,350,000 அதாவது ஆரம்ப மதிப்பீட்டில் 56 சதவீதம் மற்றும் 63 சதவீதத்தால் நிதியேற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | அலுவலக உபகரணங்கள் மற்றும் உணவு பானங்களின் விலைகள் 2023 ஆம் ஆண்டில் மிகவும் கணிசமான அளவில் உயர்வடைந்து சென்றது. அதனால் 238-1-1-0-1201 மற்றும் 1409(7) என்ற செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதாமையின் அடிப்படையில் மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதியேற்பாடு ஒதுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | மேற்படி |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய செயற்பாடுகளில் வெளியீடு (Output) மற்றும் விளைவுகள் (Outcome) குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளின் செயற்திறனை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.<br><br>எதிர்காலத்தில் சரி செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.1.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைந்துகொள்வதற்காக உரிய நிறுவனங்கள், வரிசை அமைச்சு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் சரியான தொடர்பினை ஏற்படுத்தி அரசாங்கத்தின் விரிவான அபிவிருத்தி கட்டமைப்பில் அரசிறைக் கொள்கை வழங்கல் மற்றும் அமுல்படுத்துதல் மற்றும் நாட்டில் வரிக் கொள்கையைத் தயாரிப்பதைப் போன்று வருமானம், செலவினம் மற்றும் நிதிப் பகுப்பாய்வு மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பேரினப் பொருளாதார போக்குளின் பகுப்பாய்வின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அரசிறைக் கொள்கையில் பொருத்தமான பிரகாரம் மாற்றங்களை மேற்கொள்ளல் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது.

2003 இன் 03 இலக்க அரச நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டத்தின் மூலம் அரச நிதி செயற்பாடுகளின் கட்டுப்பாடு ஆரம்பமாக மேற்கொள்ளப்படுவதுடன் இந்த சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் தந்திரோபாய திட்டங்களை கட்டுயெழுப்புதல் தொடர்பாக கீழே குறிப்பிடப்படுகின்ற 02 குறிகாட்டிகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| ஆண்டு | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| ---------- | ------ | ------- | ------ | ------ | ------ |
| பாதீட்டு இடைவெளி – மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 9.6 | 11.1 | 11.7 | 10.2 | 8.3 |
| அரச கடன் - மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 81.9 | 96.6 | 100.1 | 114.2 | 103.9 |

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் பாதீட்டு இடைவெளி மொத்த உற்பத்தியின் சதவீதமாக ஐந்து சதவீதத்தை விஞ்சாமல் கண்கானித்து கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு வரையில் அது 8.3 சதவீதமாகக் காணப்பட்டது. | குறிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் பாதீட்டு இடைவெளி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டும் என்ற கூற்று சரியானதாகும்.<br><br>2022 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 2,013 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் போது 52.8 சதவீதத்தால் ரூபா 3,074 பில்லியன் வரை மிகவும் உயர்ந்த அதிகரிப்பு | சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள முறையில் பாதீட்டு இடைவெளியைப் பேணிச் செல்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

அடையப்பட்டு 2026 ஆம் ஆண்டில் இருந்து எதிர்காலத்தில் பாதீட்டு நிலுவை 5 சதவீதத்திற்கு குறைவான பெறுமதியை பேணிச் செல்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் வரைவின் மூலம் பாதீட்டு நிலுவையின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்ப மீதியின் அடிப்படையிலான அரசாங்க நிதி விதிகளில் அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக பாதீட்டு நிலுவையில் உள்ளடங்குகின்ற வட்டி செலுத்துவதற்கான செலவினம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான செயற்பாடாகும்.

(ஆ) 2013 மற்றும் 2021 இல் திருத்தப்பட்ட அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த நிதியாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் எண்பது சதவீதத்தை விஞ்சாத வகையில் உறுதிப்படுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது 103.9 சதவீதம் ஆக காணப்பட்டது.

குறிப்பிட்டுக்கொள்கின்றோம். மேற்படி

அது சரியானதாகும். 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டம் மற்றும் 2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தின் மூலம் ஆண்டின் மொத்த பொறுப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 60 சதவீதத்தை அடைதல் 2030 ஆம் ஆண்டளவில் இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடனைக் குறைக்கும்

நோக்கில் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறித்துரைத்த அரச நிதி முகாமைத்து சட்டத்தின் வரைவின் மூலம் புள்ளிவிபர ரீதியில் அல்லாமல் புதிய அரச நிதிவிதியை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ) 2003 இன் 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில், மத்தியகால பேரின அரச நிதி கட்டமைப்பின் பிரகாரம் அரசாங்கத்தின் எதிர்வு கூறல்கள் வெளிப்படுத்துதல் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் 2023 இல் விநியோகிக்கப்பட்ட நிதி முகாமைத்து அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட மத்தியகால அரச நிதி தந்திரோபாயங்களைக் கவனத்தில் கொள்ளும் போது இரண்டு குறிகாட்டிகளின் எதிர்வுகூறப்பட்ட தரவுகள் மற்றும் உள்ளபடியான தரவுகள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றன.

| மத்தியகால பேரின அரசாங்க நிதிக் கட்டமைப்பின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தின் முன்னுரிமை | உள்ள படியான பெறுமதி (ஆண்டின் சராசரி) |
|---|---|
| • 2023 ஆம் ஆண்டு வரையில் பொருளாதாரத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் 2024 ஆம் ஆண்டு வரையில் 3.5 சதவீதத்திற்கு மேற்பட்ட பொருளாதார அதிகரிப்பு மற்றும் அதன் பின் 5-6 இடைவெளியில் பேணிச் செல்லல் | - 2.3 |
| • பணவீக்கத்தை தனி இலக்கத்தில் பேணிச் செல்லல் | 17.4 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2023 ஆம் ஆண்டு வரையில் பொருளாதாரத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் 2024 ஆம் ஆண்டு வரையில் 3.5 சதவீதத்திற்கு மேற்பட்ட பொருளாதார அபிவிருத்தி மற்றும் அதன் பின்னர் 5-6 சதவீத வீச்சில் பேணிச் | 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்று நோயின் மூலம் இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட மிகவும் கடினமான பொருளாதார சூழலின் பொருளாதார மாறிகளின் நடத்தையை எதிர்வு எதிர்வுகூறுதல் மிகவும் சவாலாக இருந்தது. அதன் பின்னர் 2023 | பொருத்தமான எதிர்வு கூறல்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லல் அரசாங்கத்தின் முன்னுரிமையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பொருளாதார அபிவிருத்தி -2.3 (மறை 2.3) ஆக காணப்பட்டது. | இன் பாதீட்டின் மூலம் 3.0 சதவீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் முதலாவது அரைப்பகுதியில் பொருளாதாரம் 7.3 சதவீதத்தால் சுருங்கியமை போன்று வெளிநாட்டு நிலப் பிரதேசங்களில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டமை, இறக்குமதி வரையறை தொடர்ந்தும் கவனத்திற்குரிய மட்டத்தில் காணப்பட்டமையால் உள்ளீடுகளுக்காக ஏற்பட்ட தாக்கங்கள் போன்ற சவால்கள் தொடர்ந்தும் காணப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி 3.6 சதவீதத்தால் சுருங்கி இருந்தமையும் 2024 ஆம் ஆண்டின் போது அப்பெறுமதி 1.8 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் -7.3 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் போது 2.3 சதவீத பொருளாதார சுருக்கம் ஒன்று அறிக்கையிடப் பட்டமையால் பொருளாதார மீட்சிக்கான அறிகுறியைக் காண்பித்திருந்தது. | |
| (ii) | மீளாய்வாண்டின் போது பணவீக்கத்தை தனி இலக்கத்திற்கு கொண்டு வருதல் முன்னுரிமையாக இருந்த போதிலும் அது 17.4 சதவீதப் பெறுமதியைக் கொண்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான வருடாந்த சராசரி பணவீக்கம் 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 46.4 சதவீதம் முதல் 2023 ஆம் ஆண்டின் போது 17.4 வீதம் வரை வீழ்ச்சி அடைந்தமை சரியானதாகும். எனினும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் வருடாந்தம் பணவீக்கம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 4.0 வீதம் ஆன தனி இலக்கம் ஒன்று அறிக்கையிடப்பட்டது என குறிப்பிடுகின்றோம். | மேற்படி |

### 3.1.3 கடன் முகாமைத்துவ முகவர் நிறுவனத்தை ஸ்தாபித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது கடன் விகிதத்தைக் குறைப்பதற்கும் மற்றும் வளர்ச்சியான மட்டத்தில் பேணிச் செல்வதற்காகவும் நிலைபேறான கடன் முகாமைத்துவ உபாய வழிகளைத் தயாரித்தலை நோக்காகக் கொண்டு அரச கடன் முகாமைத்துவ நிறுவனம் முகவர் நிறுவனம் (PDMA) ஸ்தாபிக்கும் தேவை இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | PDMA ஸ்தாபிப்பதற்காக தர்க்க ரீதியான மற்றும் தொழில் நுட்ப விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் முகவர்களை உள்ளடக்கிய ஒன்றிணைந்த சபை, இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களின் தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் பல தடவைகள் நடாத்தப்பட்டிருந்தது. இந்த கலந்துரையாடல்களின் விளைவாக PDMA ஸ்தாபிப்பதற்காக விசேடமான சட்ட ரீதியான ஏற்பாடுகளில் தேவை இனங்காணப்பட்டிருந்தது. அதன் பின்னர் PDMA ஸ்தாபிப்பதற்காக தேவையான சட்ட ரீதியான வரைவு ஒன்றை உள்ளடக்கி இலங்கையின் அரச கடன் நிலைபேறான முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளையும் உள்ளடக்கி அரச கடன் முகாமைத்துவ சட்டம் வரைவு தயாரிக்கப்பட்டு 2024.04.26 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய சட்ட வரைவு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் PDMA ஸ்தாபிப்பதற்காக தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முகவர் நிறுவனத்தை ஸ்தாபித்தலின் மிகுதி நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

### 3.1.4 பாதீட்டு திட்டத்தின் செயல்முன்னேற்றம்

2023 ஆம் ஆண்டிற்காக ஒட்டுமொத்தமாக 120 பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பாதீட்டு முன்மொழிவுகளில் வருமான முன்மொழிவுகள் 32 உம், செலவின முன்மொழிவுகள் 30 உம், கொள்கை ரீதியான முன்மொழிவுகள் 58 உம் உள்ளடங்கியிருந்ததுடன் அந்த பாதீட்டு முன் மொழிவுகளுக்காக மொத்த நிதியேற்பாட்டுத் தொகை ரூபா 49,480 மில்லியன் ஆகும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 47.2 இன் கீழ் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (Social Safety Nets Programme) இற்காக மேற்கூறப்பட்ட மொத்த உத்தேசிக்கப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகையான ரூபா 49,480 மில்லியன் தொகையில் ரூபா 43,000 மில்லியன் அதாவது மொத்த பாதீட்டு முன்மொழிவுகளின் நிதியேற்பாடுகளில் 86.9 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.<br><br>பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 47.2 இன் கீழ் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த செலவினம் முன்மொழிவுகள் 30 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 49,480 மில்லியன் தொகையில் ரூபா 43,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் போது பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மொத்த பாதீட்டு முன்மொழிவுகள் 120 இற்கு இடையே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமான முன் மொழிவுகள் 27 மற்றும் கொள்கை ரீதியான முன்மொழிவுகள் 14 மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை 70 ஆகும். அதில் வருமானம் முன்மொழிவுகள் 5 இன் செலவினம் முன்மொழிவு 30 மற்றும் கொள்கை ரீதியான முன்மொழிவுகள் 35 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | பாதீட்டு முன்மொழிவை அமுல்படுத்தல் தொடர்பான மேற்பார்வை நவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட சில பாதீட்டு முன்மொழிவுகள் சில வருடங்களாக எதிர்காலத்தில் அமுல் படுத்த வேண்டிய முன்மொழிவுகளாக இருந்த போதும் குறித்துரைத்த கால அட்டவணையுடன் முன்மொழிவுகளுக்கான நிதியேற்பாடும் உரிய ஆண்டில் மாத்திரம் வரையறுக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதாகும். | பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் போது குறித்துரைத்த கால அட்டவணையைக் காண்பிப்பதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட எந்த ஒரு செலவின முன்மொழிவும் ஆண்டில் முழுமையாக அமுல்படுத்தி பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. ெ மாத்த பாதீட்டு முன்மொழிவில் உள்ளடக்கப்பட்ட செலவின முன்மொழிவுகளில் சமூகப் பாதுகாப்பு வலைப்படுத்தல் நிகழ்சிசத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு தவிர எஞ்சிய செலவினம் முன்மொழிவுகள் 29 இற்காக ஒதுக்கப்பட்ட மொத்த பாதீட்டு நிதியேற்பாடான ரூபா 6,380 மில்லியனில் ரூபா 3,351 மில்லியன் 52 சதவீதம் நிதி செயலாற்றலை காண்பித்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட சகல முன்மொழிவுகளும் அந்த ஆண்டின் போது முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியவதுடன் அதில் சில முன்மொழிவுகள் தொடர்ச்சியான மற்றும் நீணடகால முன்மொழிவுகள் ஆபும். இதனால் இந்த முன்மொழிவுகளை 2024 ஆம் ஆண்டின் போதும் மற்றும் மேலும் எதிர்காலத்தின் போதும் அமுல்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது. ஒட்டு மொத்த செலவின முன்மொழிவுகள் 30 இல் சமூகப் பாதுகாப்பு வலைப் பின்னர் நிகழ்ச்சித் திட்டம் தவிர மிகுதி 29 முன்மொழிவுகளுக்காக ரூபா 6,380 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,351 மில்லியன் உள்ளபடியான செலவினம் செய்யப்பட்டிருந்தது. அதன் செயலாற்றல் 52 சதவீதம் ஆகும். நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடின் இடையே அரசாங்கத்தின் செலவினக் கட்டுப்பாடு மற்றும் எல்லைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் பிரகாரம் சில செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் 2023 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக கைவிடுவதற்கு அல்லது வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | செலவின முன்மொழிவுகள், குறித்துரைத்த கால அட்டவணையுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் முன்மொழிவுகளை அமுல்படுத்தல் தொடர்பாக சரியாக மேற்பார்வையும், செயல் முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளையும் செய்வதற்கு திட்டம் என்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) செலவின முன்மொழிவுகளை அமுல்படுத்துதல். | | |
| (i) பாதீட்டு முன்மொழிவின் கீழ் ஆன செலவின முன்மொழிவுகள் 30 இற்கு இடையே கூட்டுமொத்தமாக ரூபா 860 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாட்டுடன் 09 முன்மொழிவுகள், 2023 ஆம் ஆண்டில் எந்த ஒரு நிதி செயல்முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.<br><br>2023 ஆம் ஆண்டில் செலவின முன்மொழிவுகளை அமுல்படுத்துதவற்காக அமைச்சை இனங்கண்டு அந்த அந்த அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை அமுல்படுத்துதல் அந்த அந்த அமைச்சின் பொறுப்பாகும். எனினும் இதில் குறிப்பிடப்பட்ட 09 முன்மொழிவுகளை அமுல்படுத்தும் போது கட்டுநிதி பெற்றுக் கொள்வதில் கஸ்டமான நிலைமை மற்றும் மேற்கூறப்பட்ட செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் மூலம் செலவினத்தை கட்டுப்படுத்துதலும் காரணமாக இருந்தது. எனினும் இந்த முன்மொழிவுகளை அமுல்படுத்தாமை தொடர்பாக உரிய நிறுவனங்களில் இருந்து விசாரணை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கின்றோம். | பாதீட்டு முன்மொழிவை அமுல்படுத்துவது தொடர்பாக சரியான மேற்பார்வை மற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) 2023 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ரூபா 360 மில்லியன் நிதியேற்பாடு இணைந்ததான செலவின முன்மொழிவுகள் 03 இற்குரிய நிதிசார் செயல்முன்னேற்றம் பூச்சியம் ஆக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.<br><br>2023 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் மூலம் அமுல்படுத்த வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 560 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாட்டினை உள்ளடக்கியிருந்த நான்கு செலவின முன்மொழிவுகளுக்கு இடையே ஒரு | மேற்படி |

| | | |
|---|---|---|
| | முன்மொழிவுக்காக ரூபா 42 மில்லியன் நிதிசார் செயல்முன்னேற்றம் பெறப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் 03 ஆரம்பிக்கப்படாமை தொடர்பான நிலைமை கல்வி அமைச்சில் இருந்து விசாரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |
| (iii) பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 66.1 இன் கீழ் முன்மொழியப்பட்ட ரூபா 50 மில்லியன் மதிப்பீட்டுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக இளைஞர்களைப் பயிற்றுவித்தல் (Training of Youth for Forien Employment) செயற்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இந்த முன்மொழிவுக்கு உரிய எந்த ஒரு பணியும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் மேற்படி இணங்குகின்றோம். | |
| (ஊ) கொள்கை ரீதியான முன்மொழிவுகளை அமுல்படுத்துதல். | | |
| 2023 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவுகளுக்கு இடையே கொள்கை ரீதியான 09 முன்மொழிவுகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டதுடன் ஆரம்பிக்கப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை.<br><br>2023 ஆம் ஆண்டின் பாதீட்டு அறிக்கையில் கொள்கை ரீதியான 58 முன்மொழிவுகள் காணப்பட்டதுடன் அதில் சில முன்மொழிவுகளை அமுல்படுத்துதல் நடுத்தர மற்றும் நீண்டகால வடிவத்தினைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் இதில் குறிப்பிடப்பட்ட கொள்கை ரீதியான 09 | கொள்கை ரீதியான முன்மொழிவுகள், குறித்துரைத்த கால அட்டவணையுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயல்முன்னேற்றம் தொடர்பாக முறையாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முன்மொழிவுகளையும் தொடர்ந்தும் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டமை அறிக்கையிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | கடந்த ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு முன்மொழிவுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவில் உள்ளடக்கப்பட்ட கொள்கை ரீதியான முன்மொழிவு இலக்கம் 71.1 இன் பிரகாரம் செயலாற்றல் படையணியை ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 வரை செயலாற்றல் படையணி ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருடாந்தம் புதிதாக பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கடந்த ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு முன்மொழிவு தொடர்பான செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான செயல் படிமுறை ஒன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த செயலாற்றல் படையணியை ஸ்தாபிக்கும் போது அதன் பரப்பு மற்றும் நியமிக்கப்படுகின்ற நபர்கள் மற்றும் சட்ட ரீதியான மற்றும் பிரமாணங்கள் ரீதியான கடப்பபாடுகள், உள்ள நிறுவனங்களுக்கு இடையிலான தரவுகளின் செயற்திறன் தன்மையை உறுதிப்படுத்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தி தேவைகள் இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயலாற்றல் படையணியை ஸ்தாபித்தல் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதை ஸ்தாபிக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டு அந்த செயலாற்றல் படையணியை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பாதீட்டு முன்மொழிவுகளில் செயல் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்காக திட்ட முறைமை ஒன்றை விரைவாக தயாரித்தல் வேண்டும். |
| (ஏ) | 2022 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 5:4:10 இன் பிரகாரம் பாதீட்டு முன்மொழிவுகளில் எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் செயற்பாடுகளை அமுல்படுத்தி மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஒட்டுமொத்த பாதீட்டு முன்மொழிவுகள் 151 இல் ஆண்டின் இறுதிவரையில் | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை.<br><br>வருடாந்த பாதீட்டின் மூலம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின் அவற்றை அமுல்படுத்த வேண்டிய அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் | பாதீட்டு முன்மொழிவை அமுல்படுத்துதலின் செயல் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்து |

முழுமையான நிலையில் காணப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்ட 12 முன்மொழிவுகள் ஆன குறைந்த எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பாதீட்டு முன்மொழிவுகள் 120 இல் 41 முன்மொழிவுகள் மாத்திரம் பூர்த்தி நிலைக்கு உட்பட்டிருந்தது. வருடாந்த பாதீட்டு முன்மொழிவில் கவனத்தில் கொள்ளக்கூடிய எண்ணிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் அந்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்கு குறித்துரைத்த கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும் வேலைத் திட்டம் ஒன்று காணப்படாமை, அமுல்படுத்துகின்ற நிறுவனம் மற்றும் மேற்பார்வை நிறுவனங்களின் நலிவான செயலாற்றல் மற்றும் ஒட்டுமொத்த முன்மொழிவுகளை அமுல்படுத்தும் செயல்முன்னேற்றம் தொடர்பாக முறையான பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தல் மற்றும் மேற்பார்வைகளை மேற்கொள்ளும் பணிகளுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட நிறுவனம் அல்லது தரப்பினர் காணப்படாமை போன்ற நலிவுகளின் காரணமாக சமர்ப்பிக்கப்படுகின்ற பாதீட்டு முன்மொழிவுகளை அமுல்படுத்துதலின் வெற்றிகரமான செயல் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அந்த அந்த நிறுவனங்களுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்படுகின்றது. அந்த ஒவ்வொரு நிறுவனங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் இருப்பதுடன் அதை அமுல்படுத்துகின்ற நிதி அமைச்சுக்கு அறிக்கையிடுதல் அவர்களின் பொறுப்பாகும்.

அந்த முன்மொழிவுகளை அமுல்படுத்தி செயல்முன்னேற்ற அறிக்கை இடுமாறு பல சந்தர்ப்பங்களின் போது உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு எழுத்து மூலமும் வாய் மொழி மூலமும் அறிவிக்கப்பட்ட போதும் சில முன்மொழிவுகளை அமுல்படுத்துதலின் செயல்முன்னேற்றங்களுக்கு அறிக்கையிடுதல் மந்த கதியான வடிவத்தை கொண்டிருந்தது.

நிதி அமைச்சின் மூலம் மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியில் உரிய முன்மொழிவுகளை அமுல்படுத்துதல் செயல் முன்னேற்றம் அந்த அந்த நிறுவனங்களின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன அது அவ்வப்போது செயல்முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்ற பிரிவுகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் கால ரீதியில் எடுத்தல் வேண்டும்.

எடுக்கப்படுகின்றது. எனினும் பாதீட்டு முன்மொழிவை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத நிறுவனங்களில் இந்த நிலைமை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுமாயின் உங்களால் சுட்டிக்காட்டப்படுகின்ற நலிவுகளை மாற்றியமைப்பதற்கு முடியும் என அவதானிக்கின்றோம்.

பாதீட்டின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள், அமுல்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ள அந்த அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற்றை செயற்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியிருந்ததுடன் அந்தப் பணிகள் அந்த வரிசை அமைச்சின் மூலம் மேற்பார்வைக்கும் உட்படுத்த வேண்டியிருந்தது. அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உரிய நிதி ஒதுக்கீடு செய்யும் போது அந்த அந்த சந்தர்ப்பத்திற்குரிய அந்த செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றமும் விசாரணை செய்யப்பட்ட பின்னர் பொதுத் திறைசேரியின் மூலம் உரிய நிதி ஏற்பாடு விடுவித்தல் மேற்கொள்ளுதல் பொதுவான நடைமுறையாகும்.

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க இலத்திரனியல் பெறுகை முறைமையை அறிமுகப்படுத்துதல் தொடர்பான 2018 ஒக்தோபர் 23 ஆம் திகதிய இலக்கம் 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை நிறுவனம், விலை ஒப்பீட்டு முறையில் பெறுகைகளைச் செய்யும் போது இலத்திரணியல் பெறுகை முறைமை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 08 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,330,175 ஆன பொருள் பெறுகைகள் இலத்திரணியல் பெறுகை முறைமையைப் பயன்படுத்தாமல் ஒப்பீட்டு விலை முறையில் வழங்கப்பட்டிருந்தது. | இலத்திரனியல் பெறுகை முறைமையைப் பயன்படுத்தி பொருட்கள் பெறுகைகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எனினும் திணைக்களத்திற்குச் சொந்தமான மூலதன செலவின விடயங்களுக்காக காணப்படுகின்ற ஒட்டு மொத்த நிதியேற்பாடு ரூபா 600,000.00 மாத்திரமாக இருந்ததை சுட்டிக்காட்டுகின்றோம். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிதியமைச்சில் இருந்து முறையாக கையளிக்கப்படாமல் 03 வாகனங்கள் பெறப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் கோரிக்கையின் அடிப்படையில் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக நிதியமைச்சினால் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டதாக நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருமானம் சேகரித்தல் தொடர்பாக 2015 யூலை 20 ஆம் திகதிய அரச நிதி கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 4(ஆ) பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(உ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிக் காணப்படுகின்ற நிலுவை வருமானம் தாமதம் இன்றி சேகரித்தல் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் வழங்க வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வருமானம் சேகரிக்கின்ற பிரதான நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சேகரிக்க வேண்டிய மொத்த நிலுவை வருமானம் (வரி வருமானம் மற்றும் வரி அல்லா) ரூபா 714,989,620,126 ஆக காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் ரூபா 128,986,232,809 குறைவு ஒன்றைக் காண்பித்த போதும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களத்தில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 117,512,309,997 அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. | 2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதி கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் மூலம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என காண்பிக்கப்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பாக உரிய வருமானத் தலைப்பிற்கு பொறுப்பிற்காக நேரடியாக கடப்பாடுடன் உள்ள வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரை போன்று சகல அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் இந்த நிலுவை வருமானத்தை தொடர்ச்சியாக சேகரித்தல் தொடர்பாக நேடியாக பொறுப்புக்களுக்கு கடப்பாடு உடையவர்கள். | நிலுவை வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக சுற்றறிக்கை ஆலோசனை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரின் 11 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் 04 பதவிகள் சிரேஸ்ட நிலையின் பதவிகள் ஆகும். | திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களாக குறிப்பிட்டு அந்த பதவிகளை நிரப்புவதற்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கும் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |